X SEED
idiscoveri FOUNDATION FOR LIFE
UNLEASH YOUR MIND®

**Publication :** Makkal Kural **Region :** Coimbatore

**Date :** Jan 13, 2011

# கோவையில் குழந்தைகள், பெற்றோர்களுக்கு கல்வி பயிலரங்கு

கோவை, ஜன. 13-

கோவையில் குழந்தைகள், பெற்றோர்களுக்கு தனித்தனியாக கல்வி பயிலரங்கு நடந்தது.

இந்த பயிலரங்கில் எக்ஸீட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆஷிஷ் ராஜ்பால் பேசியதாவது:

பார்த்தல், கேட்டல், படித்தல், செயல்படுத்தல் என 4 விதங்களில் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர். இவற்றில் எந்த சூழ்நிலையில் குழந்தைகள் அதிகம் கற்றுக் கொள்கின்றன என்பதை அறிய வேண்டும். வகுப்பறையில் பெறும் மதிப்பெண்களுக்காக மட்டுமே குழந்தைகள் தயார் செய்யப்பட்டு கின்றன.

மதிப்பெண்களுக்கு மட்டுமே மதிப்பு என்ற சூழலில், குழந்தை வளர்ப்பு சவாலான விஷயம். நடுநிலைப்பள்ளிப் பருவத்தில்தான் குழந்தைகள் கற்றலின் அடிப்படைகளைக் கிரகிக்கின்றன. மாணவனின் எதிர்காலத்திற்கு அடிப்படையான இக்காலகட்டத்தில் குழந்தைகளின் உண்மையான ஆற்றலை தெரிந்து கொண்டு சரியாக வழிநடத்த வேண்டும்.

குழந்தைகளின் நிறைகள், குறைகள் தெரிந்தால்தான், வழிநடத்த முடியும். இந்த பயிலரங்கு மூலம் குழந்தைகளைப் பற்றிய புரிதல் அதிகரிக்கும்.

குழந்தைகள் பிடித்தமான வழியில் கற்றுக்கொள்ள வேண்டும். என்பதே இதன் நோக்கம். இவ்வாறு, ஆஷிஷ் ராஜ்பால் பேசினார்.

குழந்தைகளுக்கு பல்வேறு விதமான போட்டிகள் நடத்தப்பட்டு, திறன் அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது.